பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu" — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்

மலர்: 16] சென்னை: ஆனி 6 (19—6—68) புதன் ★ வெளியூர்: ஆனி 7 (20—6—68) வியாழன் [இதழ்: 4

மாணவர்கள் கவனத்திற்கு:

சென்னை, ஜூன் 19—

இந்த ஆண்டு நடைபெற்ற இறுதி ஆண்டுத் தேர்வில் வெற்றிபெறாத மாணவர்களுக்கு மீண்டும் மறுபோர்டு நடைபெறும் ஒரு தேர்வு நடத்தவிருக்கிறது.

இத்தேர்வுக்கான விண்ணப்பத்தை உரிய கட்டணத்தோடு ஜூலை 31-ஆம் நாளுக்குள் அனுப்பிவிட வேண்டும்.

"ஜூலை 31-க்குள் அனுப்பத் தவறுபவர்கள் ஒரு ரூபாய் அபராதத் தொகை செலுத்தித் தேர்வுக்கான தகவலுடைய விண்ணப்பங்களை ஆகஸ்டு 8-ஆம் நாளுக்குள் அனுப்பவேண்டும்" என்று தமிழக அரசுத் தேர்வுகள் துறை அறிவிக்கப் பட்டிருக்கிறது.

ஏழை மக்களுக்குக் கல்வி வசதி

குறைந்த நிதி வசதியுள்ள அரசினால் மட்டும் பிரச்னையைத் தீர்க்க இயலாது

பிறர் நலனுக்கு உழைக்கின்றவர்கள் கடமை--

முதலமைச்சர் அண்ணா கனிவுரை

சென்னை, சூன் 19 -

"ஏழை மக்களுக்குக் கல்வி வசதி செய்து தருவதில் பிறர் நலனுக்காகவே உழைக்கின்றவர்கள் அரசுக்கு உதவ வேண்டும்; இப்பெரிய பிரச்சினையை குறைந்த நிதி வசதியுள்ள அரசினால் மட்டும் தீர்த்துவிட முடியாது,

"நமது நாட்டின் அமைப்பு முறையில் அரசுக்கு எவ்வளவுதான் பண வலிவு இருந்தாலும், கல்வித் துறையில் தனிப்பட்டவர்களும் முன்வந்து உதவியில் கல்விப் பணியாற்றுவது மெத்தச் சிரமமாக இருக்கும்-- காலதாமதமும் ஏற்படும்!

"பிறருக்கு உதவும் பண்பாடு, தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்றிப் போற்றப்படும் பண்பாடு ஆகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்.

தியாகராய நகர் கன்னிகா பரமேசுவரி அற நிலையத்தின் புதிய கட்டிடத்தை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்துவைத்துப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"கிடைக்கும் பணத்தை கல்வி முறையில் பயன் படுத்துவது தான்கல் பொருளாதார வலிவு ஆகும்.

'ஏராளமான பணத்தைப் பெற்றிருப்பதுதான் பொருளாதார வலிவு' என்று விவரமறியாதவர்கள் நினைப்பார்கள்.

'கிடைக்கின்ற பணத்தை எப்படிப் பயன்படுத்துவது—அதன் மூலம் என்ன பலன் கிடைக்கும்' என்பதை அறிந்து செயல்படுவதுதான் ஆரோக்கியமான முதலீடு முறையாகும்; அந்த முறையில் இந்த அற நிறுவனம் இயங்குவது பாராட்டுக்குரியதாகும். அதிலும் குறிப்பாக இந்த நிறுவனம், ஏழைக் குழந்தைகளின் கல்விக்காக உதவுகிறது -- கல்வி நிறுவனங்களை நடத்துகிறது என்பதை அறியும்போது மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாக இதுபோன்ற அற நிறுவனத்தினரும், தனிப்பட்டவர்களும் கல்விப் பணிக்கு உதவி வருகின்றனர்.

பிறருக்கு உதவும் பண்பாட்டை மெய்ப்பிக்கும் வகையில் இப்போது இந்த அற நிலையத்தினர் தீ விபத்து நிவாரண நிதிக்கு ரூ 1,000 தந்திருக்கின்றனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் ரூ. 10,000; நண்பர் சிவாஜி கணேசன் ரூ. 11000; வேறு நண்பர்கள் ரூ. 1,000 நன்கொடைகள்; அதோடு இந்தப் பணத்தையும் சேர்த்து மாகராட்சி மன்றத் தலைவரிடம் ஒப்படைத்து தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்னமிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சியின் சிறப்புமிக்க பணி

தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர நிவாரணம் தரச் சிறிது காலம் ஆகலாம்; ஆனால் நாம் அவர்களுக்குச் செய்யும் உடனடி நிவாரணம் அன்னமிடுதலும், தற்காலிக மாக இடம் தருவதுமாகும். இந்தப் பணியை மாநகராட்சி நல்லமுறையில் செய்து வருகிறது; அதற்கு மேலும் ஊக்கம் தரும் வகையில் இந்த நிதி அவர்களிடம் தரப்படும்.

இளைஞர்கள் கடமை

இளைஞர்கள் திடகாத்திரமாக இருக்கும்போதே பொதுப் பணியில் ஈடுபட வேண்டும். வயதான காலத்தில், 'ஐயோ; நான் என்னென்னவோ நினைத்திருந்தேன்; இப்போது கைகால் ஒடலில்லையே' என்ற எண்ணமுதில் பயனில்லை!

நாம் திருப்தியாகச் சாப்பிட்டு உறங்கி எழுவதில் உள்ள இன்பத்தைவிட, பிறருக்கு உணவளித்து அவர்கள் திருப்தியாக உண்டு உறங்கி எழுவதைக் காணும் இன்பம்தான் நிரந்தரமான இன்பம்! அத்தகைய இன்பத்தைப் பெற இளைஞர்கள் முன்வர வேண்டும்."

குழப்பங்கள் மலிந்த ஆட்சிமொழிப் பிரச்சினை

மறுபரிசிலனை செய்யப்படுமாம்

புதுடில்லி, சூன் 19—

மத்திய அரசுத் துறைகளுக்குத் தேவையான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் துறையில் நாடாளுமன்ற [illegible] தொழிற்முள்ள ஆட்சிமொழித் தீர்மானம், இந்தி பேசாத மாநில மக்களை எரிச்சல் கொள்ளச் செய்திருக்கிறது.

இந்த அச்சங்களைத் தவிர்க்க மும்மொழித் திட்டம் வலியுறுத்தப்படுகிறது; இத்திட்டமும் இந்தி பேசுகின்ற மக்களையும் திருப்தி செய்யவில்லை -- இந்தி பேசாத மக்களுக்கும் இத்திட்டத்தினால் எத்தகைய பலனும் ஏற்படவில்லை!

மத்திய அளவில் இருமொழித் திட்டத்தை--அதாவது இந்தியையும் ஆங்கிலத்தையும் கட்டாய மாக்கினால் மத்திய அரசுத் துறைகளில் பணிபுரிய விரும்புபவர்கள், நிர்வாகத்திலும் கல்வித் துறையிலும் ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிற முப்பது சதவீத வாய்ப்புகளில் சிறிது மட்டுமே தமிழகம் போன்ற மாநிலங்களும் பெறமுடியும் என்று கருதப்படுகிறது.

தான் இத்திட்டம் அமுலாக்கப் படுகின்ற வாய்ப்பு கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

எல்லா மாநிலங்களும் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும், ஆங்கிலத்துடன் இன்னொரு மொழி மத்திய சர்வீசு கமிஷன் தேர்வுகளில் பயிற்சி மொழியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்காது.

இத்தகைய குழப்பங்கள் மலிந்த ஆட்சி மொழிப் பிரச்சினை ஸ்ரீநகரில் கூடியிருக்கும் தேசிய ஒருமைப்பாடு மாநாட்டில் மறுபரிசிலன செய்யப்படும் என்று அறியப்படுகிறது.

2,800 குடிசைகள் சேதம்--

16,000 பேர் வீடிழந்து தவிப்பு

உணவுப் பொட்டலம் வழங்கத் திட்டம்---

மாநகராட்சி ஆணையர் தரும் விளக்கம்

சென்னை, சூன் 19—

"திங்கட்கிழமை இரவுடன் முடிந்த 6 நாட்களில் நகரில் ஏற்பட்ட தீ விபத்துகளின் காரணமாக 16,000 பேர்கள் வீடிழந்துள்ளனர்; 2 800 குடிசைகள் சாம்பலாகி இருக்கின்றன.

"பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக செவ்வாயன்று மட்டும் இரண்டு வேளைகளுக்கும் சேர்த்து 31,600 உணவுப் பொட்டலங்களை நகராட்சி வழங்கியிருக்கிறது"

என்று, சென்னை மாநகராட்சி ஆணையர் அம்பாசங்கர், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முதலமைச்சரிடம் தரப்பட்ட நிதி--உணவு வழங்கத் திட்டம்

"தீயினால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கத் தம்மிடம் தரப்பட்ட ரூ 22,000-தையும் முதலமைச்சர் அவர்கள், என்னிடம் திருப்பி அளித்துள்ளார்; இப்பணத்தை உணவுப் பொட்டலங்களைத் தயாரித்து வழங்கும் செலவுகளுக்கு மாநகராட்சி பயன்படுத்திக் கொள்ளும்"

என்றும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

73 பேர் கைது

"சென்னையில் குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்துக்களில் ஏற்பட்ட தீ விபத்துக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தியாவின் இதயம்' எனக் கூறப்படும் மாநிலத்தில்தான் இந்த விசித்திரம்!

அரிசியும் கோதுமையும் எதிரியின் நாட்டுக்கு!

உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து செஞ்சீனாவுக்குக் கடத்தப்படுகிறது

கள்ள வர்த்தகத்தில் 1,000 லாரிகள்--

5,000 நபர்கள் ஈடுபட்டுள்ளனர்

8,000 டன் அரிசி--1,000 டன் கோதுமை சென்றுள்ளதாம்

ஆக்ரா, சூன் 19—

"இவ்வாண்டில் உத்தரப் பிரதேசத்தின் மொத்த அரிசி உற்பத்தியில் கால் பங்கு, நேபாளம் வழியாகச் செஞ்சீனாவுக்குக் கடத்தப்பட்டிருக்கிறது.

"இதுவரையில் 2-இலட்சம் மணங்கு (சுமார் 8,000 டன்) அரிசி சென்றிருக்கிறது; கோதுமை 25,000 மணங்கு (சுமார் 1 000 டன்) சென்றிருக்கிறது.

"சுமார் 1,000 லாரிகளும், 5,000 பேர்களும் இந்தக் கள்ள வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தியக் கோதுமையை ஏற்றிக்கொண்டு நாள்தோறும் 50 லாரிகள் நேபாளத்துக்குச் சென்றுகொண்டிருக்கின்றன"

என்ற திடுக்கிடும் தகவல்கள், உத்தரப் பிரதேச உணவுத் தானிய வர்த்தகர் சங்கத் தலைவர் பிஷம்பர் தயாள் அகர்வால தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"கடத்தல்காரர்கள் இயற்றிற்கும் பதில் செஞ்சீனாவிலிருந்து சர்க்கரை, டேப்—ரிக்கார்டர்கள், கைக்கடிகாரங்கள், நைலான் துணிகள் ஆகியவற்றைக் கொண்டுவருகின்றனர்; அலைகள் இப்போது உ. பி. மார்க்கெட்டுகளில் குவித்துள்ளன."

உரிமைக்குரல் எழுப்புகிறது கேரளம்!

மாநிலங்களுக்கிடை ஏற்றத்தாழ்வு காட்டுவதற்கு எதிர்ப்பு

திட்டக் குழுத் துணைத் தலைவரிடம் தொழில் திட்டங்கள்பற்றி விவாதம்

திருவனந்தபுரம் சூன் 19—

"தொழில்துறைகளில் மாநிலத்திற்கு மாநிலம் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்"

என்று திட்டக் குழுத் துணைத் தலைவர் டி. ஆர். காட்கிலிடம் கேரளத் திட்டக் குழு உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

கேரள மாநிலத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவது பற்றியும், அதனைச் செயல்படுத்துவது பற்றியும் விவாதித்தபோது, கேரள மாநில அமைச்சர்கள் சிலரும் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர்.

"மத்திய அரசு கேரளத்தில் சில பொதுத் துறைத் தொழில் நிறுவனங்களை நிறுவுவதோடு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மீனளத் துறையை விரிவுபடுத்த மத்திய அரசு உறுதுணை புரியவேண்டும்"

என்று கேரள மாநிலப் பிரதிநிதிகள், காட்கிலிடம் தெரிவித்துள்ளனர்.

"தொழிற்சாலைக்கு உரிமை வழங்குவதில் மத்திய அரசு கொண்டுள்ள கொள்கையை கேரள மாநிலம் போன்ற தொழில் துறையில் பின்தங்கியுள்ள மாநிலங்களுக்காகத் தளர்த்த வேண்டும்"

என்றும் அவர்கள் யோசனை வழங்கியுள்ளனர்.

"தேசிய அளவில் உணவுக் கொள்கையை உருவாக்குவதில் சிக்கல்கள் இருக்குமானால், கேரள மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறையைப் போக்கக் கேரள மாநிலத் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவியை அதிகப்படுத்த வேண்டும்"

என்றும் அவர்கள் திட்டக் குழுத் துணைத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இவ்விவாதம் முடிவுற்ற பின் டாக்டர் காட்கில், கேரள மாநில முதலமைச்சர் நம்பூதிரிபாடுவை அவருடைய இல்லத்தில் சந்தித்தார்.

அரசியலில் 66-ம் 67-ம்

"தி. மு. கழகம், மக்கள் நலம் கருதிக் கூறப்படும் எந்தக் குற்றச்சாட்டையும் தள்ளிவிடவில்லை; 'ஏற்கமாட்டோம்' என மறுத்ததுமில்லை!

"ஆட்சிப் பொறுப்பேற்ற போதே அண்ணா அவர்கள், 'குறை இருந்தால் சுட்டிக்காட்டுங்கள்; தவறு செய்தால் தடுத்து நிறுத்துங்கள்; ஏனென்றால், திமிர் பிடித்தவர்கள் அல்லர் நாங்கள்; தவறு என்று தெரிந்தால் திருத்திக்கொள்ளும் சுபாவமுடையவர்கள்' என்று கூறியிருக்கிறார்கள்!

"'நீ என்ன சொல்லுவது? நானென்ன கேட்பது?' என்பது 66-ஆம் ஆண்டோடு முடிந்த கதை!

"'நீ சொல்; நியாயமிருந்தால் நான் கேட்கிறேன்' என்பது 67-ஆம் ஆண்டின் வரலாறு!"

—மு. கருணாநிதி

(சென்னை 59-வது வட்டக் கூட்டத்தில்)

விடுமுறையை விட்டுக் கொடுத்தால் ஊதியம்

அரசு ஊழியர்களுக்குப் புதிய திட்டம்

சென்னை, சூன் 18—

ஒரு மாத விடுமுறையைத் துறந்தால் அதற்குரிய நாட்களுக்குப் படியுடன் கூடிய சம்பளம் தமிழக அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும்; ஆனால், இதற்குச் சில நிபந்தனைகள் உண்டு.

இந்தத் திட்டத்தின்படி 30 நாட்களுக்கும் குறையாமல் விடுமுறை எடுக்கும் ஊழியர்கள், தங்கள் எஞ்சிய விடுமுறைகளைத் துறக்கலாம்; துறக்கும் விடுமுறை நாட்கள் 30 நாட்களுக்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது அவ்வாறு துறக்கும் விடுமுறை நாட்களுக்கு சம்பளமும், படியும் கிடைக்கும்.

இந்த வசதியை விடுமுறையில் செல்லும்போதுதான் — அதுவும் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இந்தத் திட்டம் கேரளத்தில் உள்ளது போலவே இருக்கிறது

இது சம்பந்தமான அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

தேசியம் தெரியுமா?

'மாணவர்கள்' – கேள்விப்பட்டிருப்பீர்கள்!
'வழக்கறிஞர்கள்' – தெரிந்த பெயர்தான்!
'விவசாயிகள்' – பழக்கமான சொல்தான்!

தேசிய மாணவர்கள்
தேசிய வழக்கறிஞர்கள்
தேசிய விவசாயிகள்

இப்படி ஒரு அடைமொழி கொடுத்து, தனது செல்வாக்கில் இருப்பவர்களைக்கொண்டு எழுதிப் பழக்கப்படுத்தி வருகிறது— காங்கிரசுப் பத்திரிகை ஒன்று!

குறிப்பாகத் தி. மு. கழகம் தமிழக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்பு, இந்தப் பாகுபாட்டினை அந்தக் காங்கிரசு நாளேடு மறக்காமல் வலியுறுத்தி வருகிறது!

காங்கிரசு மாணவர்கள் —
காங்கிரசு வழக்கறிஞர்கள்—
காங்கிரசு விவசாயிகள்—

எனத் தனது ஆதரவாளர்களை அழைப்பதற்கு அப்பத்திரிகைக்கு உரிமை இருக்கிறது!

ஆனால், காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த விவசாயிகள் தான் தேசிய விவசாயிகள்;

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர்கள்தான் தேசிய வழக்கறிஞர்கள்;

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த மாணவர்கள்தான் தேசிய மாணவர்கள்;

மற்றைய மாணவர்கள், விவசாயிகள், வழக்கறிஞர்கள், தேசத்துக்கும் தேசியத்துக்கும் வேறுபட்டவர்கள் - மாறுபட்டவர்கள்

என்ற உட்பொருள் தொனிக்க எழுதுவதும், பேசுவதும் எந்த வகையிலும் தேசிய உணர்வினை வளர்ப்பதற்கோ, காப்பதற்கோ பயன்படாது!

மற்ற கட்சி சார்புடைய மாணவர்களை – தொழிலாளர்களை – வழக்கறிஞர்களை -- இன்னும் பல்வேறுபட்டவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக எல்லோருக்கும் பொதுவான 'தேசியம்' என்ற சொல்லைத் தனதாக்கிக்கொள்ளும் காங்கிரசின் போக்கு, எந்த அரசியல் அமைப்புகளையுமே சாராத நடுநிலையான வழக்கறிஞர்களை -- மாணவர்களை -- மற்றவர்களை அவமதிப்பதாகக்கூட இருக்கிறது!

'தேசியம்' என்ற சொல்லை, இப்படி, 'கட்சி – அரசியல்' பொருளில் பயன்படுத்துவது எந்த வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்பது தெரியவில்லை!

உண்மையில் உள்ள தேசிய உணர்வினைத்தான், இது எந்த வகையில் அலட்சியப்படுத்துகிறது -- கேவலப்படுத்துகிறது என்பதனையும் அந்தப் பத்திரிகை உணர்ந்ததாகத் தெரியவில்லை!

"காங்கிரசில் பற்றுக்கொண்ட மாணவர்கள்தான் தேசியத்தில் பற்றுள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்" என அந்த நாளேடு கருதுமானால், 'தேசியத்தை நோக்கிக் காங்கிரசு போகவில்லை; தேசியம், காங்கிரசுக்குத் தக்கவாறு மாறுகிறது' என்பதனைத்தான் அது காட்டுவதாக இருக்கிறது!

'இந்தியா' என்ற சொல்லுக்கு முன்னால், 'ALL' என்ற சொல்லைச் சேர்ப்பதன் மூலம்தான் கட்டுக்கோப்பு பிறக்கிறது -- ஒற்றுமை தோன்றுகிறது -- என்ற கருததிலோ என்னவோ— காங்கிரசு அந்த நாளில் செய்துவிட்ட தவறை வேறொரு தவறான வடிவில் வடித்தெடுக்கிறது இங்கே உள்ள பத்திரிகை!

'காங்கிரசின் பெயரையே மாற்ற வேண்டும்' என்று அண்மையில் புதுடில்லியில் கூடிய மேல்மட்டக் கூட்டத்தில் யோசனை தெரிவித்த தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், தனது கடசியின் நாளிதழ் வளர்க்கும் புதிய பாணி தேசியங்களை முதலில் தடுத்து நிறுத்த முயலட்டும்!

—எஸ். ஆர்.

காதில் விழுந்தது!

"மலிவு விலை என்ற அறிவிப்புடன் வரும் விளம்பரங்களைப் பார்த்திருக்கிறாயா?"

"இது ஒன்றும் புதிது இல்லையே! அன்றாடம் கேள்விப்படுவதுதானே!"

"ஆனால் அதில் ஒரு புதிய சேர்க்கை! சீனாவின் மா சே-துங்கும், இந்தியாவில் பல மலிவு விலை விற்பனை நிலையங்களைத் திறந்திருக்கிறார்."

"என்ன, புதிர் போடுகிறாய்?"

"புதிதல்ல; பத்திரிகைச் செய்திகள்தான்! சீனர்கள் எல்லையில் இருப்பதாகத் தானே கேள்விப்பட்டிருக்கிறாய்? அவர்கள் இப்போது இந்தியர்களின் இல்லம் வரை வந்திருக்கின்றனர்!"

'இது என்ன வேடிக்கை?'

"'ஏன் இந்த வேதனை' எனக் கேட்பாய் என்றல்லவா நினைத்தேன்? சொல்கிறேன், கவனி; 'இந்தியாவின் இதயம்' என்று அழைக்கப்படும் உத்தரப் பிரதேசத்து மாவட்டம் ஒன்றில், சீனக் கள்ளக்கடத்தல் பொருள்கள் ஏகப்பட்ட மலிவாம்! கடிகாரமாம் -- டிரான்சிஸ்டர் ரேடியோவாம் -- பற்பசைப் பெட்டியாம் -- கற்கள் பதித்த மோதிரமாம் -- இன்னும் எத்தனையோ பொருள்கள்! அத்தனையும் மலிவான விலைகளில்! அதாவது, இந்தியப் பொருள்களைவிடக் கொள்ளை மலிவாக!

"ஏன்; இந்தியப் பொருள்களை அங்கே விரும்புவதில்லையா? எதிரியின் உற்பத்தியில் இத்தனை நாட்டமா?"

"'எதிரியின் பொருட்களை உள்ளே வரவிட்டது யார் குற்றம்' என்ற நினைப்பாக இருக்கலாம்; 'எச். எம். டி. கடிகாரம் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது' என்று சுதேசி உணர்வுடன் கூறினால்கூட, 'எவருக்கு வேண்டும் அது? இதோ சீனக் கடிகாரம் ரூ. 50 முதல் ரூ. 60 வரையில் மலிவாக' எனப் பதில் சொல்கிறார்களாம்!"

"நட்பு நாடுகளிலிருந்தே எந்த ஒரு பொருளையும் எடுத்துவரக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கும் போது எதிரி நாட்டிலிருந்து இப்படி ஒரு கள்ளக் கடத்தலா?"

"ஆமாம்; இதற்கு முன்னால்கூடச் செய்தித் தாள்களைப் பார்க்கவில்லையா -- நாகர்களுக்குச் சீனர்கள் அளித்துள்ள உதவிகள் பற்றிய படங்களை? தலைமறைவு நாகர்களுக்குப் போர் ஆயுதங்கள்! இந்திய மக்களுக்கு மலிவு விலைப் பொருள்கள்! ஆக்கிரமிப்பில் இது ஒருவகை!"

"'பகை'யைச் சரிவரத் தடுத்து நிறுத்தாதனால் வந்த வினை—என்று கூறுவது தான் பொருந்தும்! இந்திய ரூபாய்கள் போன்று, 'கள்ள நோட்டு'கள் அச்சிட்டு வருவதாகச் சீனாவைப் பற்றி ஏற்கனவே ஒரு செய்தி! அத்துடன் இப்போது, கள்ளக்கடத்தலும் சேர்ந்திருக்கிறது!"

"ஆயிரக்கணக்கான சதுர மைல் பரப்பளவுள்ள பூமியை இழந்திருப்பவர்களுக்கு ஏதாவது 'சகாயங்கள்' செய்யவேண்டாமா? அதனால் ஏற்பட்ட 'ஈகை' உணர்ச்சிதான் இத்தனை மலிவில் கள்ளக்கடத்தல் பொருள்கள்! 100 ரூபாயில் டிரான்சிஸ்டரையும், ரூ. 1.50-ல் பற்பசையையும், ரூ. 50-ல் கடிகாரத்தையும், ரூ. 80-ல் மோதிரத்தையும் பெறும் எத்தனை உள்ளங்கள், சீனாக்காரனுக்கு 'நன்றி' தெரிவிக்கும்!"

"வெட்கக்கேடு!"

—எஸ். ஆர்.

ஏழைகளின் சாபத்துக்கு ஆளாக வேண்டாம்!

தீயும் கையுமாகத் திரியும் தீயவனே--எண்ணிப் பார்!

"இன்றையத்தினம் நமது இதயத்தை எல்லாம் குலுக்கி வருவது சென்னையில் நடைபெற்றுவரும் தீ விபத்துக்கள்!

"இந்தத் தீ விபத்துக்கள் அரசியல் மாறுபாட்டின் காரணமாகத் தான் ஏற்படுகிறது என்றால், அது எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும்–எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்– அந்த அரசியல்வாதியைக் கேட்கிறேன்—'உமக்கு இதயமில்லையா?' என்று!

"எங்கள்மீது--எங்கள் ஆட்சியின்மீது எரிச்சல் இருந்தால், எங்களுடைய வீட்டைக் கொளுத்துங்கள்! அதை விடுத்து, ஏது மறியாத பிஞ்சுக் குழந்தைகள் கருகிச் செத்திட---பாட்டாளி மக்கள் பதறித் துடித்திட--குடிசைக்கு ஏன் தீ வைக்கிறீர்கள்?

"மழை பெய்தால் தரையெல்லாம் வெள்ளம்--வெயில் அடித்தால் வீடெல்லாம் வெப்பம்--என்ற நிலையில், பாம்புகளுக்கும்--பல்லிகளுக்கும், பூரானுக்கும்--தேரைக்கும்--தேளுக்கும் இடையே வாழ்க்கை நடத்தும் ஏழைகளின் குடிசைகளுக்குத் தீ வைத்து, அவர்கள் நிர்க்கதியாய் நின்று புலம்பிடச் செய்கிறாயே! 'உன் வாயிலே புற்று வராதா? உன் வயிற்றிலே கும்பநோம் தோன்றாதா? தீ வைக்கும் உன் கையிலே தீராத குட்டம் பிடிக்காதா?' என்று அந்த ஏழைகள் கண்ணீர்விட்டுச் சபிப்பார்களே! அந்தச் சாபம் உங்களுக்கு மட்டுமா -- தமிழ்ச் சமுதாயத்திற்கே இட்ட சாபமாக மாறுமே! அரசியல் காழ்ப்பால் தீயும் கையுமாகத் திரியும் தீயவனே! எண்ணிப் பார் இதனை!"

---அமைச்சர் மு. கருணாநிதி

(சென்னை 59-வது வட்டக் கூட்டத்தில்)

உணவு உற்பத்தியில் புரட்சி

பற்றாக்குறை நீங்கித் தன்னிறைவு பெற-- உற்பத்தி அதிகரிக்க வழிகோல முயற்சி

உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து, அதிக விளைச்சலைக் காணவேண்டும் என்றால் உற்பத்தியில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும்.

ஆற்றுப் பாசனம் இல்லாத இடங்களில் ஏற்றம் வைத்து நீர் இறைத்துவந்த காலம் உண்டு; ஆனால், இப்போது பம்பு செட்டுகள் பயன்படுத்தும் நிலைக்கு வந்துள்ளதுபோல், உழவு—நடவு—அறுவடை போன்ற பல வேலைகளுக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதுதான் இதற்கு ஒரே வழி.

மாட்டுச் சாணம், சாம்பல், தழைகள், பிற கழிவுப் பொருள்கள் இவைகளை மட்டுமே எருவாகப் பயன்படுத்திவந்த நிலை மறைந்து இன்று இரசாயன உரங்கள் பெரும் அளவில் பயன்படுகின்றன.

களை எடுத்தல் தவிர பயிர்ப் பாதுகாப்புக்கு வேறு எதுவும் செய்யாதிருந்த காலம் மறைந்து இப்போது பூச்சி, வெட்டுக்கிளி, எலி தொல்லைகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க நவீன முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உழவு, விதைத்தல், அறுவடை போன்ற முக்கியமான பிற வேலைகளிலும் முன்னேற்றம் கண்டால் உற்பத்தி பெருமளவில் உயரும் என்பதில் சந்தேகமில்லை.

வளர்ந்துவரும் பல நாடுகளில் மரக் கலப்பைகளில் மாடுகளை பூட்டி உழுவதும், விவசாயத் தொழிலாளர்களே நாற்றுகளைப் பறித்து நடுவதும், அவர்களே வயல்களில் இறங்கி அறுவடை செய்வதும் இன்னும் கடைபிடிக்கப்படும் பழக்கமாகும்.

இவ்வளவு வேலைகளுக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியுமா என்றால் நிச்சயமாக முடியும். அதனால் நன்மைகள் உண்டா என்றால் பெருத்த நன்மை உண்டு என்று உறுதியாகக் கூறலாம்.

'அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்' என்று ஒரு பழமொழி உண்டு எவ்வளவு ஆழமாக உழுகிறோமோ அவ்வளவுக்குப் பயிர் செழிப்பாக வளருவதுடன், கதிர்களும் நிறைந்து காணப்படும் என்பதாலேயே இந்த வழக்கு.

என்னதான் முயன்றாலும் இயந்திரம்போல் ஆழமாக மனிதனால்—மாடுகளின் உதவியோடு—உழ முடியாது. அதுமட்டுமல்ல; ஆண்டாண்டுக்காலமாகப் பயிர்செய்து பண்படுப்போன நிலங்களில் தான் மேலும் மேலும் கலப்பையால் உழுவது எளிதாக இருக்கிறதே தவிர, கட்டாந்தரை, கரம்பு நிலங்கள் இவற்றில் கலப்பை பயன்படாது. அப்படியே பயன்படுத்தினாலும், கலப்பையின் 'கொழு' வீணாகிவிடும். இதனாலேயே பெரும்பாலும் கிராமத்து மக்கள் அதில் அக்கறை காட்டுவதில்லை.

எனவே, அவை அப்படியே—பயன்படாமல்—தரிசாகக் கிடக்கின்றன. வளர்ந்து வரும் விவசாய நாடுகளில் கணிசமான நிலப்பரப்பு இதுபோல் தரிசாகவே கிடக்கின்றன.

உற்பத்தி பெருகுவதில் அக்கறை காட்டிவரும் அரசாங்கங்கள் எல்லாம் முதலில் இப்படி தரிசாகக் கிடக்கும் நிலங்களை விவசாயத்துக்கேற்ப மாற்ற வேண்டும். இதற்குச் சிறந்த வழி, இயந்திரங்களைப் பயன்படுத்துவதுதான்.

கரம்பு நிலங்களில் செடி கொடிகளை அகற்றுதல்—கிளறிவிட்டு சமப்படுத்துதல்—பிறகு ஆழமாக உழுவது வரையில் எல்லா வேலைகளையும் இயந்திரங்கள் செய்துவிடும்.

மேலும், வாரக்கணக்கில் செய்ய வேண்டிய வேலையை இந்த இயந்திரங்கள் நாட்கணக்கில் செய்துவிடுவதால், ஒரு போக நிலங்களில் இரு போகமும், இரு போக நிலங்களில் முப்போகமும் பயிரிடவும் வாய்ப்பு இருக்கிறது.

சில நாடுகளில், காளை மாடுகளுக்குப் பதில் கறவை மாடுகளையேகூட ஏரில் கட்டி உழுகிறார்கள். பாவம்! காலையில் பாலைக் கறந்து கொண்டு, பிறகு ஏரில் பூட்டி நாள முழுதும் உழுதுவிட்டு, பிறகு மாலையில் மீண்டும் பால் கறக்க வேண்டும் என்றால், அந்தப் பிராணிகளின் நிலை என்ன? இத்தனை தொல்லைகளையும் நீக்கிவிடுமே—இயந்திரக் கலப்பைகள்!

அறுவடையிலும் இதே நிலைமைதான். ஒரு ஏக்கர் நிலத்தை ஒரு ஆள் அறுவடை செய்ய ஒரு வாரம் ஆகலாம். அதற்குப் பிறகு களத்துமேட்டில் அடிக்கவும், தூசி, பதர் நீக்கி நெல்லைப் பிரிக்கவும் மேலும் சில நாட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் இயந்திரத்தின் மூலம் ஒரே நாளில் இவ்வளவு வேலைகளையும் முடித்துவிடலாம்.

பூச்சி மருந்து தெளிப்பது பல நாடுகளிலும் பரவலாக்கப்பட்டுள்ளது; இருப்பினும், இதில் இன்னும் முன்னேற்றம் காண வேண்டியிருக்கிறது. இன்னமும் பல நாடுகளில் இந்த மருந்தைத் தண்ணீரில் கலந்து 'வாளி'களில் வைத்துக்கொண்டு கையால் தெளித்து வருகிறார்கள். இது மனித ஆரோக்கியத்திற்குக் கெடுதலாகும். தெளிப்பவரின் உடல் நலமே இதனால் பாதிக்கப்படக்கூடும்

மேலும், எல்லா இடங்களிலும் பரவலாகவும், சீராகவும் இந்த முறையில் தெளிக்கமுடியாது மருந்து அதிகமானால் அது பயிரையேகூட அழிக்கக்கூடும் இதற்கும் ஒரு இயந்திரம் இருக்கிறது. பிளாஸ்டிக்கினால் ஆன பெரிய பைகளில் — 2 அல்லது 2 காலன் கொள்ளும்—பூச்சி மருந்தை நிரப்பிக்கொண்டு இயந்திர உதவியால் சீராக மருந்தைத் தெளிக்க முடியும். இந்தப் பைகளில் அளவு கோடுகள் உண்டு. தேவைடான அளவு மருந்து தெளிக்கப்பட்டவுடன் நிறுத்திவிடலாம்.

இப்படி விவசாய முறையில் நவீன முறைகளைக் கையாண்டு இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தி பயிர் செய்தால், உற்பத்தி பன்மடங்கு பெருகுவதற்கு நிச்சயம் வாய்ப்பிருக்கிறது

விவசாயத்திற்கு மிகவும் பயன்படும் இதுபோன்ற இயந்திரங்கள் பிரிட்டனில் பெருமளவில் தயாரிக்கப்பட்டு அபிவிருத்தியடைந்து வரும் பல நாடுகளுக்கும்—குறிப்பாக காமன்வெல்லத் நாடுகளுக்கு—அனுப்பப்பட்டு வருகின்றன.

நேற்றுவரை கலப்பையும் மண்வெட்டியும் பயன்படுத்தி வந்த ஒரு விவசாயியிடம் இன்று 'டிராக்டரை' நிறுத்தி உழச் சொன்னால் அவரால் இயலுமா? எனவே, முழுக்க முழுக்க ஒரே நாளில் இயந்திரமயமாக்கிட முனையாமல், படிப்படியாக இந்தத் துறையில் வளர்ச்சியடைந்தால் இயந்திரங்களை இயக்குவது விவசாயிகளுக்கு எளிதாக இருக்கும் பற்றாக்குறை நீங்கி தன்னிறைவு பெறவும், உபரி உற்பத்தி காணவும் இது வழிவகுக்கும்.

மீனவர் - சம்மாட்டிமார் தகராறு

சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பன் தலைமையில் அண்ணாவிடம் தூது

சென்னை, சூன் 18—

பாம்பன், இராமேசுவரம் போன்ற இடங்களில் ஒன்றிரண்டு மீன்பிடி படகுகளை வைத்திருப்பவர்களுக்கு, 'சம்மாட்டிமார்'கள் என்ற பெயருண்டு.

இவர்கள், தாமே மீன் பிடிக்கச் செல்வதோடு, துணைக்கும் ஆட்களை (மீனவர்களை) வேலைக்கு வைத்துக்கொள்வார்கள். இப்படி வேலைக்கிருப்பவர்களுக்கு சம்மாட்டிமார்கள் ரூ 500, ரூ. 1,000 என்று அவ்வப்போது கடன் தருவது வழக்கம்.

அண்மைக்காலமாக, 'சம்மாட்டிமார்களுக்கும்—பிற மீனவர்களுக்கும் இராமேசுவரம் பகுதியில் கூலி உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காகத் தகராறு ஏற்பட்டது.

இராமநாதபுரம் துணைக் கலெக்டர், மாவட்டத் தொழிலாளர் நல அதிகாரி ஆகியோர் முன்னிலையில் பேச்சு நடந்தும், ஒப்பந்தம் ஏற்பட்டும்கூட, திருப்திகரமான சூழ்நிலை உருவாகவில்லை.

மீனவர் பலர், தாமே கூட்டுறவு சங்கம் அமைத்துத் தொழிலை நடத்தப் போவதாகச் சொல்லி அதற்கான ஏற்பாட்டிலும் இறங்கிவிட்டனர்; கூட்டுறவுத் துறையும் அதற்கு உதவ முன்வந்துள்ளது.

இந்நிலையில், அவ்வாறு தனியே தொழில் செய்யப்போகும் மீனவர்களிடமிருந்து சம்மாட்டிமார்'களுக்குச் சேரவேண்டிய கடன் தொகை சுமார் ரூ 2 இலட்சத்திற்குமேல் பாக்கி நிற்கிறது.

வேறு மீனவர்களை அமர்த்திக் கொள்வதென்றால், அவர்கட்கு முன்பணம் தந்து ஏற்பாடு செய்யும் பொறுப்பும் 'சம்மாட்டிமார்'களுக்கு உள்ளது.

எனவே, இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பா தலைமையில் ஜோசப் பர்னாண்டோ, பாண்டியன் பர்னாண்டோ, சந்தியாகு ஆகியோர் கொண்ட தூதுக் குழுவினர், முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்தனர். இராமநாதபுரம் தோழர் சேக்சுல்தானும் உடனிருந்தார்.

தற்போதுள்ள தொழிலாளர்கள் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்திக் கொள்ளப்போவதால், வேறு தொழிலாளர்களை அவர்கள் வைத்துக்கொள்ள முன்பணம் தந்து ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், விலகியவர்களிடமிருந்து 'சம்மாட்டிமார்'களுக்குக் கிடைக்க வேண்டிய கடன் தொகைகளை மீனவத் தொழிலாளர்கள் அனுபவ முறைப்படி கிடைக்கச் செய்வதன் மூலம் தங்கள் மீன்பிடித் தொழிலை மீண்டும் இயங்கச் செய்ய ஆவன உதவ வேண்டுமென்றும் தூதுக் குழுவினர், தங்கள் கோரிக்கை எடுத்துவைத்தனர்.

விலகிய தொழிலாளர்கள் மீண்டும் வந்தால் வேலைக்கு எடுத்துக் கொள்ளத் [illegible]ராக இருப்பதாகவும் ச[illegible]ார்கள் தெரிவித்தார்கள்.

அனைத்தையும் கேட்ட அண்ணா அவர்கள், ஆவன செய்வதாகக் கூறினார்கள்.

நெய்வேலி எம்.ஜி.ஆர். மன்றம்

8-6-68 அன்று நெய்வேலி-2ல் நடைபெற்ற எம். ஜி. ஆர். மன்றப் பேரவையில், கீழ்க்கண்டவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: ஆ. சிங்காரம்; துணைத் தலைவர்: ம. துரைசாமி; செயலாளர்: ந. கலியபெருமாள்; துணைச் செயலாளர்: ந இராமானுசம்; பொருளாளர்: சௌ. இராசேந்திரன்; மேலமைப்புப் பிரதிநிதி: மு. முத்தப்பன்; செயற்குழுவினர்: ச. கல்யாணராமன், இரா. செங்கமுத்து பி.ஏ., ந சூரிய மூர்த்தி, அ. இராமசாமி, மு. அரங்கசாமி, கே. இராசகோபால், த. ந. மாணிக்கம், ந. சின்னப்பன், பி. சோயல்.

மனிதத் துயர் துடைக்கும் புனித பணிக்கு உதவுவீர்!

காயிதே மில்லத் வேண்டுகோள்

சென்னை, சூன் 17—

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப் எம்.பி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"சென்னையில் நிகழ்ந்த தீ விபத்துக்களால் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் வீடிழந்து திக்கற்றவர்களாகிவிட்டனர்!

"பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெரும் சொத்துக்களும், உடைமைகளும் மீட்க முடியாதபடி அழிந்துவிட்டன!

"அரசாங்கத்தவர் எடுத்துள்ள நிவாரணப் பணிகள் போக, சென்னை மேயரும் ஒரு நிவாரண நிதியைத் தொடங்கி நன்கொடைகள் செலுத்துமாறு கோரியுள்ளார்.

"மனிதத் துயரையும் துன்பத்தையும் போக்குவதற்கான புனிதப் பணி இது; ஒவ்வொருவரது சிறந்த உள்ளுணர்ச்சியையும் கோருவது இது!

'மேயரின் வேண்டுகோள், இதயபூர்வமான ஆதரவை--ஆர்வமிக்க ஆதரவைப் பெறுவதற்குரியது!

'எனவே, மனிதாபிமானத்தின் அழைப்புக்குத் தாராளமாக உதவச் சென்னையிலும் வெளிப்புறத்திலும் உள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் முன்வருவர் என்று நான் தீவிரமாக நம்புகிறேன்."

லாட்டரிச் சீட்டு மூலம் கிடைக்கும் இலாபம்

கல்வி ---- வேளாண்மைப் பணிகட்குப் பயன்படும்

இராஜஸ்தான் அரசின் திட்டம்

ஜெய்பூர், சூன் 18—

அதிருஷ்டச் சீட்டுத் திட்டத்தை இராஜஸ்தான் அரசு இறுதியாக உருவாக்கி விட்டது.

இத்திட்டத்தை வெளியிட்ட நிதியமைச்சர் மதுரதாஸ் மதுர், கேரளத்தில் செயல்பட்டுவரும் லாட்டரிச் சீட்டு முறைகளை ஆராய்ந்து வர லாட்டரிச் சீட்டு இயக்குநரை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவித்தார்

இராஜஸ்தானில் இவ்வாண்டில் ஒரு சீட்டாவது குலுக்கப்படுமென்று தெரிகிறது.

லாட்டரிச் சீட்டுகள் விற்பனையில் வசூலாகும் பணத்தில் பத்துச் சதவிகிதம் பரிசுகளுக்கு ஒதுக்கப்படும்.

லாட்டரி இலாபத்தில் கிடைக்கும் பணம், துவக்கப் பள்ளிகள் கட்டவும், கிராம மின்விசை வசதிகளுக்கும், ஏரிகள் கட்டவும் பயன்படுத்தப்படும்.

திருச்சி மாவட்டத்தில் இரு போகச் சாகுபடி!

11,000 ஏக்கரில் திட்டம்

திருச்சி, சூன் 18—

திருச்சி மாவட்டத்தில், சேலம்—திருச்சி கால்வாய்ப் பாசன வசதிகளைப் பயன்படுத்தி மேலும் 11,000 ஏக்கர் நிலங்களை, இரு போகச் சாகுபடியின் கீழ் கொண்டுவருவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இரு போகச் சாகுபடித் திட்டத்தின்கீழ் திருச்சி வேளாண்மைப் பகுதியில் 9,500 ஏக்கரும், கரூர்ப் பகுதியில் 1,500 ஏக்கரும் கொண்டுவரப்படும்.

கிணற்றுப் பாசனமுள்ள பெரம்பலூர், துறையூர் பகுதிகளில் புதுரக 'ஐ ஆர்.-8' ரக விதை சாகுபடி செய்யப்படும்.

இத்தகவல்களை, மாவட்ட கலெக்டர் அரிபாஸ்கர், செய்திபாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஒளிக் கதிர் உதவியால் ஓடும் கார்கள்!

விண்வெளியில் சஞ்சரிக்கும் ஒளிக் கதிர்களுள் ஒன்றான 'லாசர் கிரணம்' மகத்தான ஆற்றல் வாய்ந்ததாகும்.

எதிர்காலத்தில் இந்த ஒளிக் கதிரின் உதவியால் கார் போன்ற சிறிய போக்குவரத்துச் சாதனங்களை ஓட்டத் தொடங்கிவிடுவார்கள்!

இதற்கு முன்னோடியாக ஹானோவரில் அண்மையில் நடைபெற்ற பொருட்காட்சியில் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த மின்சாரச் சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று, விளையாட்டுக் கார் ஒன்றை லாசர் கிரணத்தின் மூலம் செலுத்திக் காட்டியது.

லாசர் கிரணம் நேராகப் பாய்ச்சப்பட்டபோது அந்தக் குட்டிக் கார் நேராகச் சென்றது. அந்தக் கிரணத்தின் திசை திருப்பப்பட்ட போதெல்லாம் அதற்கேற்ப காரும் திசை மாறிச் சென்றது.

அந்தநல்லூர் ஒன்றியத்தில் சீரணிப் பணி

எட்டரை பஞ்சாயத்தில் அக்னீசுவரர் கோவிலுக்கு அருகிலுள்ள குடிதண்ணீர் கிணற்றை சீரணித் தொண்டர்கள் தூர் எடுத்தனர்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் கே. தர்மராசன் ஐ.ஏ.எஸ். அவர்கள், 9—6—68 காலை இந்தத் துப்புரவு பணியைத் துவக்கிவைத்து அனைவரையும் வரவேற்று சீரணித் தொண்டர்களின் அரும் பணியையும் மக்கள் காட்டிய உற்சாகத்தையும் பாராட்டினார்.

எட்டரை ஊராட்சிமன்றத் தலைவர் முத்துக்கருப்பன், துணைத் தலைவர் மு. நடராசன் ஆகியோர் இப்பணிக்குப் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டு ஆவனவற்றை செய்து ஒத்துழைத்தார்கள்.

இப்பணியில் 15-சீரணித் தொண்டர்களும், 10-கிராமப் பொதுமக்களும், விரிவுப் பணியாளர்களும், கிராம நல ஊழியர்களும் கலந்துகொண்டு, பணியைச் சிறப்பித்தனர்.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய கல்வி விரிவு அலுவலர் டி. எஸ். ரெங்கநாதன் நன்றி நவில துப்புரவு பணி மாலை 6-50 மணிக்கு முடிந்தது.

அறப்போர் வீரர் மறைவு

அருப்புக்கோட்டை வட்டம் பாளையம்பட்டி கழகத் தோழரும் இந்தி எதிர்ப்பு அறப்போரில் மூன்று திங்கள் சிறை சென்றவரும், தி. மு. க. துணைச்செயலாளருமான அரங்கநாதன், 8—6—68-ல் மறைவுற்றார்; இவருக்கு மனைவியும் 2 ஆண் குழந்தையும் 1 பெண் குழந்தையும் உள்ளன.

செய்தி அறிந்தவுடன் திரு. வே, தங்கப்பாண்டியன் எம்.எல்.சி, தோழர்கள் பி. பி. என். நல்லதம்பி, பாளையம்பட்டி செயலாளர் செல் ஆகியோர் சென்று மலர் மாலை அணிவித்து தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர். மற்றும் ஏராளமான தோழர்கள் வந்து இரங்கல் தெரிவித்தனர்

25 இலட்சம் ஏக்கர் நிலத்தில் இருபோக சாகுபடித் திட்டம்

தமிழக அரசின் தீவிர முயற்சி

உரிய உதவிகள் விவசாயிகளுக்குக் கிடைக்கும்--மாவட்டந்தோறும் ஏற்பாடுகள் தீவிரம்

சென்னை, ஜூன் 18 –

நடப்பு ஆண்டில் 25 இலட்சம் ஏக்கர் நெல் வயல்களில் அதிக விளைச்சல் தரும் நெல் விதைகளை விளைவித்துப் பயிரிடத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இப்போதைய திட்டத்திலுள்ளதைவிட இது இருமடங்கு நிலப் பரப்பாகும். இப்போது 12 இலட்சம் ஏக்கரில் அதிக விளைச்சல் நெல் பயிராகிறது.

தஞ்சை மாவட்டத்தில் மேற்கொண்டு 6 இலட்சம் ஏக்கர் நிலம் இருபோக சாகுபடிக்கு வரும். இப்போது 3 இலட்சம் ஏக்கரில்தான் இருபோக சாகுபடி செயல்படுகிறது. எனவே, புதிய திட்டத்தின்கீழ் மொத்தம் 9 இலட்சம் ஏக்கர் நஞ்சை நிலம் இருபோக சாகுபடிக்கு வரும்.

இருபோக சாகுபடித் திட்டத்தின்கீழ், முதல் போகத்தில் குறுவையும், இரண்டாவது போகத்தில் நாளடியும் சாகுபடி செய்யப்படும்.

முதல் போகத்தில் ஏ.டி.டி. 27 (ஆடுதுறை கெ. 27) விதைக் கப்படும்; இரண்டாவது போகத்தில் (நாளடியில்) வழக்கம்போல் சி. ஒ. 25 (கோவை கெ. 25) பயிரிடப்படும்; இது நீண்டநாள் பயிராகும்.

விவசாயிகளுக்கு அரசு யோசனை

கோவை கே. 25 வகைக்குப் பதிலாக ஏ.எஸ்.டி. 5 அல்லது சி.ஒ. 32 வகையைப் பயிரிடு மாறு விவசாயிகளை அரசு கேட்டுக்கொள்கிறது.

இவ்விரு வகைகளும் நடுத்தரக் காலப் பயிர்கள்; இவைகளுக்குப் பதில் குறுகிய காலப் பயிரான சி ஒ. 29 ரக நெல் சாகுபடி செய்யலாமென்றும் விவசாயிகளுக்கு அரசு யோசனை கூறியுள்ளது.

தாளடி பயிருக்குத் தண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைப்பது ஒரு வழியாகும் என்று கருதப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத் துக் கு வெளி மாவட்டங்களிலிருந்து ஏடிடி. 27 ரக நெல் விதைகள் அனுப்பப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் போதுமான அளவுக்கு விதைகள், உர வகைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரா கக் கையிருப்பில் வைக்கப்பட் டுள்ளன.

சம்பா விதைகளும் தயாராக உள்ளன.

ஊர்கள்வாரியாக நிலப் படங்கள்

2,900 கிராமங்களில் இருபோக சாகுபடி விரிவுபடுத்தப்படுகிறது.

ஊர்வாரியாக நிலப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஊரிலும் எவ்வளவு நிலம் சாகுபடிக்கு வருகிற தென்பதை இதைப் பார்த்துத் தும் தெரிந்துகொள்ளலாம்.

நிலங்களுக்கு எந்தெந்த வாய்க் காலிலிருந்து தண்ணீர் பாய்கிறது என்பதையும் இந்த நிலப்படம் விளக்குகிறது.

சாகுபடி முறைப்படி குறைவில்லாமல் நடப்பதற்கு வேண்டிய வகையில் விவசாயிகளுடன் கலெக்டர் நேரடிப் பேச்சு நடத்துகிறார்.

விதைப்பாடு முதல் அறுவடை வரையில் செய்ய வேண்டிய வேலைகள், விவசாயிகளுடன் கலந்துகொண்டு பங்கீடாக அமைக்கப்படுகின்றன.

இடையூறுகளின்றி கடன் வசதிகள்

1968-69-ல் தஞ்சாவூர் மாவட் டத்தில் விவசாயிகளுக்கு ரூ. 6 கோடி கடன் தேவைப்படும். கடன் வசதிகள் செய்து தரு வதில் இடையூறுகள் எதுவும் இராது என்று தெரிகிறது.

தூரித மின்விசை

நாற்றங்கால்களுக்குத் தேவை யான தண்ணீர் வசதிக்காகப் பம்பு செட்டுகள், வடிமூன்க் கிணறுகள் பயன்படுத்தப்படு கின்றன.

மின் விசை வழங்கப்படாத கிணறுகளுக்குத் தூரிதமாக மின்விசை வழங்கும்படி மின் சார போர்டு கேட்டுக்கொள் ளப்பட்டிருக்கிறது.

திருச்சியில்:

திருச்சி மாவட்டத்தில் 12,000 ஏக்கர் நிலம் இருபோக சாகு படித் திட்டத்தின்கீழ் வரும்; இதில் ஏ.டி.டி. 27 ரகம் பயிரி டப்படும்; 1,000 ஏக்கரில் ஐ.ஆர். 8 ரகம் பயிரிடப்படும்.

சிதம்பரத்தில்:

சிதம்பரம் தாலுகாவில் வீர நாராயணன் ஏரி ஆயக்கட் டின்கீழ் 26,000 ஏக்கர் நிலத் தில் ஏ.டி.டி. 27 சாகுபடி செய்யப்படும்.

தருமபுரியில்:

தர்மபுரி மாவட்ட கிருஷ்ணகிரி தாலுகாவில் 13,000 ஏக்கர் நிலத்தில் ஏ.டி.டி. 27 சாகுபடி யாகும்.

வடார்காட்டில்;

வடாற்காடு மாவட்டத்தில் சாத் தனூர் அணைத் திட்டத்தின் கீழ் 14,000 ஏக்கர் நிலத்தில் ஏ.டி.டி. 27 விளைவிக்கப்படும்.

இதைத் தவிர, 1,96,000 ஏக் கரில் சோளம், கம்பு போன்ற புஞ்சைத் தானியங்களை விளை விக்கும் திட்டமும் செயல்படுத் தப்படும்.

சத்தனூர் அணை நீர்

வேலூர், ஜூன் 19—

"சாத்தனூர் அணையிலிருந்து வட ஆர்காட்டில் 1,423 ஏக் கருக்கும், தென்னாற்காடு மாவட்டத்தில் 1,647 ஏக்கருக் கும் ஏ.டி.டி. 27 ரகம் சாகுபடி செய்வதற்காக மட்டும் ஜூன் 16-ம் நாளிலிருந்து தண்ணீர் விடப்படுகிறது"

ஏழை எளியவர் வாழ்வுடன் விளையாடும் தீயவர் யார்?

அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்த முனைவோருக்கு கி. மஞ்சகரன் எச்சரிக்கை

"தமிழகத்தின் தலைநகரத்தில் மீண்டும் தீவைப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்தையாக வருகின்றன! ஏழை எளிய குடிசைவாசி களின் வாழ்வோடு விளையாடும் தீயவர்கள் யார்? அதற்குப் பின்னலிருந்து 'தீக்கொழுத்தி'களுக்கு உற்சாகம் ஊட்டுகின்ற பெரிய மனிதர்கள் எவரெவர்?--என்பது, இன்று மக்களி டையே கேள்விக் குறியாக நிற்கின்றது!

"அவர்கள் யாராக இருந்தாலும் சரி—அவர்கள் மனிதர்கள் தானே என்னும், மனிதாபிமானம் பண்பிற்கு மாறுக நடைபோட முயல்கின்ற அந்தத் தீயவர்களைப் பார்த்தாவது கேட்கிறேன்—உங்களுக்கு இதயம் இருக்கின்றதா?

"உங்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பீடத்தில் இருப்பது பிடிக்கவில்லையென்றால்—அதைச் சகித்துக்கொள்ள முடியவில்லையென்றால்—ஜனரியமிருந்தால் அவர்களைத் தாக் கிப் பாருங்கள்; துணிவிருக்குமானால் துப்பாக்கிகளைக் கொண்டு தொலைத்துவிடுங்கள்; ஆனால், ஏழை எளிய மக்களின் வாழ்க்கையோடு விளையாடாதீர்கள்!

"உண்மைக் குற்றவாளிகள் யார் யார் என்பதும், அவர்கள் எந்த முகாமைச் சேர்ந்தவர்கள் என்பதும் விரைவில் மக்கள் முன் அம்பலமாகத்தான் போகின்றன!

"குற்றவாளிகள் எவரெவர் என்பது வெளிப்படுமானால், தமிழ் மக்கள் அவர்களைச் சும்மாவிடமாட்டார்கள்!

"தீ வைப்பு நிகழ்ச்சிகளால் இந்த அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்த அந்தச் சதிகாரர்கள் முயன்றிருக்கலாம்.

"இதயமற்றவர்களே! இந்தச் சம்பவங்களால் அரசுக்கு நெருக் கடி ஏற்படும் என்பது உண்மை; வேதனைகளுக்குமேல் வேத னையை ஏற்படுத்துகிறீர்கள்—உண்மை! சோதனைகளுக்கு மேல் சோதனைகள் உண்டாக்கி ஒழுங்காக நடைபெற்றுவரும் ஆட்சிக்கு தடைக்கற்களே ஏற்படுத்தி சஞ்சலத்துக்குள்ளாக்கு கிறீர்கள்—மறுக்கவில்லை! ஆனால், இத்தகைய நெருக்கடிகளே ஏற்படுத்துவதன் மூலம் மக்களுடைய அனுதாபத்தை பெற்று விடலாம் என்று மட்டும் எண்ணுகிறீர்கள்! மக்கள் ஏமாளிகள் அல்லர்! அவர்களுக்கு நிலைமைகள் தெளிவாகத் தெரிகின் றன! 'தீட்டப்மிட்ட சதி' என்று அவர்கள் இன்றைகே பேசிக்கொள்கிறார்கள்!

"நீங்கள் அவர்களது அனுதாபத்தை இத்தகைய முறைகளில் பெற்றுவிடலாம் என்று கருதினால், அவர்கள் மீண்டும் உங்க ளுக்குச் சரியான பாடம் கற்பிக்கத் தவறமாட்டார்கள்!"

(சென்னை 91-வது வட்டக் கூட்டத்தில்)

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சம்பவங்களைத் திங்களன்று மாலையிலும், இரவிலும் 78 பேர் கொண்ட போலீசார் கைது செய் துள்ளனர்.

"இவர்களெல்லாம் போலீசா ரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட சமூகவிரோதச் சக்தி களாகவர்; அவர்களுடைய நட வடிக்கைகள் ஆராயப்பட்டு வரு கின்றன.

"முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாகவே இவர்கள் கைது செய் யப்பட்டிருக்கின்றனர்"

என்று சென்னைப் போலீசுக் கமிஷ னர் குப்புசாமி அவர்கள், செய்தி யாளர்களிடம் தெரிவித்தார்.

தீ விபத்துக்குள்ளான மக்களுக்கு என். வி. என். ஆறுதல்

சென்னை, ஜூன் 19—

சென்னை 33, 35-வது வட்டங் களில் தீ விபத்தினல் பாதிக்கப் கிறே ங்கள், காங்கிரஸ் ஆகிய பகுதிகளை இன்று மீண்டும் ஒரு முறை கழக அமைப்புச் செய லாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி அவர்கள் சென்று சுற் றிப் பார்த்தார்.

வட்டச் செயலாளர் கோதண் டம் உடன் வந்திருந்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆளான அப் பகுதி மக்களுக்குத் தக்க ஆறுதல் கூறியதுடன், நிவாரண வேலைகள் மேற்கொண்டு தொடர்ந்து நடப் பது பற்றியும் அந்த வட்டங்களைச் சார்ந்த கழகத் தோழர்களிடம் கேட்டறிந்தார்.

தீக் கொடுமைக்கு ஆளான தாய்மார்களும், சிறுவர்களும் அமைப்புச் செயலாளரிடம் வந்து முறையிட்டபோது அவர்களுக்கு என். வி. என். அவர்கள், உரிய ஆறுதல் மொழிகளைக் கூறினார்.

அமைச்சர் மாதவன் ஸ்ரீநகர் பயணம்

சென்னை, ஜூன் 19—

ஸ்ரீநகரில் நடைபெறும் தேசிய ஒற்றுமை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இன்று ஸ்ரீந கருக்குப் பயணமாஞர்.

சென்னை-வண்ணைப் பகுதி சீரணியருக்கு:

"சென்னை வண்ணைப் பகுதிச் சீரணியினர் கூட்டம் 20—6—68 வியாழக்கிழமை மாலை 7 மணியள வில், 9, மணிகண்ட முதலி 6-வது தெருவில் உள்ள நகராட்சி மன்ற பூங்காப் உயர்நிலைத் துவக்கப் பள்ளியில் நடைபெறும்; சீரணித் தோழர்கள் இதனையே அழைப் பாக ஏற்று அவசியம் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்" என்று வண்ணைத்தொகுதி சீரணித் தலைவர் த. வெங்கடேசன் எம்.சி., அறிவிக்கிறார்.

தென்காசி இடைத் தேர்தல்

கழக வேட்பாளருக்கு பி. சோ. கட்சி ஆதரவு

மதுரை, ஜூன் 19—

குலத் திங்கள் மூன்றும் நாள் நடைபெறவிருக்கும் தென் காசி சட்டமன்றத் தொகுதிக் கான இடைத் தோதலில் தி. மு. க. வேட்பாளர் திரு. க. எம். கதிரவன் அவர்களே ஆதரிப்பதென தமிழ நாடு பி. சோ. கட்சி முடிவு செய் திருக்கிறது.

இம்முடிவினை, தமிழ்நாடு பி. சோ. கட்சித் தலைவர் திரு. ஆறு முகசாமி, ஓர் அறிக்கையின் மூலம் தெரிவித்திருக்கிறார்.

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

வணக்கம். நிகழும் 20—6—68 வியாழக்கிழமை மாலை எனது அண்ணன் திரு. கே. ஏ. மூருகேசன் அவர் களின் மகன் செல்வன் கே. எம். செல்வராஜ் M.V SC-க் கும், தமிழக அரசு பொது சுகாதாரத்துறை நர்சிங் செவி லாளர் திரு. கே. சிதம்பரம் அவர்களின் மகள் செல்வி மீனு வுக்கும் சென்னை-தேனும்பேட்டை ஆயிடஸ்பிரி இல்லத்தில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் அண்ணு அவர்களின் தலைமையில் நடைபெறும் திருமண விழா லிற்குத் தாங்கள் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

அன்பன்,

கே. ஏ. மதியழகன்

உணவு, வருவாய்த்துறை அமைச்சர்

மாலை 5-00 மணி : திருமண விழா

இரவு 7-30 மணி : சென்னம் கலைமணியும் அபிக்கும் செல்வி சந்திரகாந்தா வின் 'பொன்மனச் செல்வி' (வரலாற்று நாட்டிய நாடகம்)

பரிசுகள் வழங்காதிருக்க வேண்டப்படுகிறது

நேரமே முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. நிர. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஞாயிறுதோறும், வெள்ளிக் கிழமைகளும், அல்லது வியாழக்கிழமைகளும் கொண்டு அலுவலக அச்சகத்தில் (24, சூளைநடராஜன் செட்டித் தெரு, சென்னை-1) அன்றே வெளியிட்டுக்கொள்ளுங்கள்.